<u>சுருக்கம்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் – விடுதிகள் – 2007–08–ஆம் ஆண்டில் 50 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்ட திட்டமதிப்பீடு மற்றும் வரைபடங்களுக்கு ஏற்பளிப்பு மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை.

அரசாணை (நிலை) எண். 80 நாள்:28.08.2007

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றம் சீர்மரபினர் நல இயக்குநரின்
கடித எண். சி2/2556/2007, நாள். 23.6.2007.

* * * * * * * * *

**<u>ஆணை:</u>**

2007–08–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை உரையில் தற்போது தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் 50 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கான விடுதிகளுக்கு ரூ.32.50 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காண் அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 50 மாணவர்கள் தங்கிக் கல்வி பயிலும் வகையில் விடுதி ஒன்றிற்கு ரூ.48.00 இலட்சம் செலவில் 25 விடுதிக் கட்டடங்களும், 100 மாணவர்கள் தங்கிப் பயிலும் வகையில் விடுதி ஒன்றிற்கு ரூ.82.00 இலட்சம் செலவில் 25 விடுதிக் கட்டடங்களும் கட்ட உரிய திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றை அனுப்பிவைத்து மொத்த செலவினமான ரூ.32.50 கோடிக்கு ஒப்புதலும் கோரியிருந்தார்.

3. இதனை அரசு நன்கு ஆய்ந்து, எதிர் சவ்வூடு பரவல் முறையில் குடிநீர் சுத்திகரிக்கும் அமைப்பினை விடுதிகளில் நிறுவுவதை திட்ட மதிப்பீட்டிலிருந்து நீக்கி, 50 மாணவர்கள் தங்க கூடிய வகையில் நவீன வசதிகளுடன் கட்டடம் கட்டுவதற்கு ஒரு விடுதிக்கு ரூ.47.60 இலட்சம் செலவினம் வீதம் 25 (17 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி, 8 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி) விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மொத்தம் ரூ.1190.00 இலட்சமும், 100 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் நவீன வசதிகளுடன் கட்டடம் கட்டுவதற்கு ஒரு விடுதிக்கு ரூ.81.00 இலட்சம் செலவினம் வீதம் 25 (17 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி, 7 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி, 1 சீர்மரபினர் விடுதி) விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மொத்தம் ரூ.2025.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3215.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் அனுப்பப்பட்ட, 50 மாணவர்கள் தங்கக்கூடிய விடுதி ஒவ்வொன்றும் தரைதளம் 283.22 சதுரமீட்டர், முதல் தளம் 182.17 ச.மீ. பரப்பளவு மற்றும் தலைமை அறை 20.56 ச.மீ. கொண்ட வரைபடத்திற்கும் 100 மாணவர்கள் தங்கக்கூடிய விடுதி ஒவ்வொன்றும் தரைதளம் 303.60 ச.மீ., முதல் தளம் 259.00 ச.மீ., இரண்டாவது தளம் 322.40 ச.மீ. மற்றும் தலைமை அறை 30 ச.மீ. பரப்பளவு கொண்ட வரைபடத்திற்கும் அரசு ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது.

5. இணைப்பு 1–ல் உள்ள 25 விடுதிகளுக்கு 50 மாணவர்கள் தங்கும்படியான விடுதிக்கட்டடமும் இணைப்பு II-ல் உள்ள 25 விடுதிகளுக்கு 100 மாணவர்கள் தங்கும்படியான விடுதிக்கட்டடமும் கட்டப்படவேண்டும்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நலம் :</u>

“4225 ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 – கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II- மாநிலத்திட்டம் –JY- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லக் கட்டங்கள் கட்டுதல் – 16 – பெரும்பணிகள் (கு.தொ.கு. 4225 03 277 JY 1603).

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்:</u>

“4225 ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II - மாநிலத்திட்டம் –JZ- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்ல கட்டநடங்கள் கட்டுதல் 16 – பெரும்பணிகள் (கு.தொ.கு. 4225 03 277 JZ 1601).

7. மேலே பத்தி 3–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியினை தலைமைப்பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்கள் மேற்கொள்ளுவார்.

8. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும், இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 50 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும் தலைமைப்பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இந்த 50 விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கான நிலங்களை உடன் பொதுப்பணித்துறையிடம் நிலக் கிரையமின்றி ஒப்படைக்குமாறும், மேற்படி அனைத்து விடுதிகளும் முழுமையாக கட்டப்படும்வரை காலமுறை ஆய்வினை (Periodical Inspection) மேற்கொண்டு கட்டுமானப்பணியின் முன்னேற்றம் மற்றும் தரத்தை உறுதி செய்து கொள்ளும்படியும், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட வடிவமைப்புகளின்படி கட்டடங்கள் கட்டவும், நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி உரிய அலுவலர்களிடம் மேலொப்பம்/அனுமதி பெற்ற பின்னரே கட்டடப்பணிகள் துவங்கப்படவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை பொதுப்பணித் துறையின் அ.சா.எண்.21599/Y2/2007-1, நாள்.6.7.2007 மற்றும் நிதித்துறையின் அ.சா.எண். 51265/பி.மி.பி/2007, நாள்.9.8.2007–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ந. வாசுதேவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை –5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல இயக்குநர், சென்னை– 5.
தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
பொதுப்பணித்துறை, சென்னை– 5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை –18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், (துணிக்கை 1),
சென்னை–18/ (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை –2),
சென்னை –6/ (பெயரில்).

**<u>நகல்:</u>**

**முதலமைச்சர் அலுவலகம், சென்னை. 9.**
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
நிதி (வ.செ.பொது I/பிமிபி/வ.செ.பொது II) துறை, சென்னை –9.
பொதுப்பணித்துறை, சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்(பிந3)துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு -1

## 50 மாணவ/மாணவியர்கள் தங்குவதற்கான விடுதிக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய விடுதிகள்

| வரிசை எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, சாத்தனூர். |
| 2. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, நல்லவன் பாளையம். |
| 3. | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, பூதேரி புலவாக்கம், வெண்பாக்கம் ஒன்றியம், செய்யாறு. |
| 4. | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை, காட்டுமன்னார்கோயில். |
| 5. | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, சேப்பாக்கம். |
| 6. | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, நடுவீரப்பட்டு. |
| 7. | விழுப்புரம் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, தேவபாண்டலம் |
| 8. | தருமபுரி | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, பயர்நத்தம் |
| 9. | தருமபுரி | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, அரூர். |
| 10. | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, மல்லூர். |
| 11. | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, வலசையூர். |
| 12. | ஈரோடு | மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, சின்னக்கம்பட்டி. |
| 13. | ஈரோடு | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, முத்தூர். |
| 14. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, கன்னிவாடி. |
| 15. | திருச்சி | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, புதூர்பாளையம். |
| 16. | பெரம்பலூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளிமாணவியர் விடுதி, மேலணிக்குழி. |
| 17. | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளிமாணவர் விடுதி, நெய்வேலி தெற்கு அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவோணம் தொகுதி. |
| 18. | திருவாரூர் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, மன்னார்குடி. |
| 19. | திருவாரூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, திருவாரூர். |
| 20. | நாகப்பட்டினம் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, சீர்காழி. |
| 21. | நாகப்பட்டினம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, குத்தாலம். |
| 22. | திண்டுக்கல் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, கள்ளிமந்தையம். |
| 23. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, கீரனூர். |
| 24. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, இடையக்கோட்டை. |
| 25. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, சத்திரப்பபட்டி. |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு –2

## 100 மாணவ/மாணவியர்கள் தங்குவதற்கான விடுதிக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய விடுதிகள்

| வரிசை எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | பிற்படுத்தப்பட்டோர், கல்லூரி மாணவியர் விடுதி, திருவண்ணாமலை |
| 2. | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, சிதம்பரம். |
| 3. | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, சிதம்பரம் |
| 4. | விழுப்புரம் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, விழுப்புரம். |
| 5. | விழுப்புரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, சின்னசேலம். |
| 6. | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, ஆத்தூர். |
| 7. | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, சேலம். |
| 8. | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, கோயம்புத்தூர். |
| 9. | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, வெள்ளக்கோவில். |
| 10. | திருச்சி | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, திருச்சி. |
| 11. | பெரம்பலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, பெரம்பலூர். |
| 12. | பெரம்பலூர் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, தென்னூர் வரதராஜன் பேட்டை. |
| 13. | புதுக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, அரசு மாமன்னர் கலைக்கல்லூரி, புதுக்கோட்டை. |
| 14. | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம். |
| 15. | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர். |
| 16. | நாகப்பட்டினம் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை. |
| 17. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, காந்தி கிராமம். |
| 18. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, வத்தலகுண்டு. |
| 19. | திண்டுக்கல் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, பஞ்சம்பட்டி. |
| 20. | திண்டுக்கல் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, ஒட்டன்சத்திரம். |
| 21. | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, கொடைக்கானல். |
| 22. | இராமநாதபுரம் | சீர்மரபினர் கல்லூரி மாணவியர் விடுதி, இராமநாதபுரம். |
| 23. | இராமநாதபுரம் | பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, நீராவி. |
| 24. | வேலூர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, கே.வி.குப்பம். |
| 25. | தஞ்சாவூர் | மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, பூண்டி. |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.